4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஏ) பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சி தொடர்பாக.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று நடைபெற்ற சம்பவங்களுக்குப் பிறகு எல்லாவற்றையும் அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட்டேன். இனி இப்படிப்பட்ட வார்த்தைகள்தான் அவைக் குறிப்பிலே இருக்கும் என்பதைப் பத்திரிகை நிருபர்களுக்கு இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

"சட்ட அமைச்சர் அவர்கள் கூறிய வார்த்தை குறித்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருத்தம் தெரிவித்துக் கொண்டதோடு, அமைதி காக்கவேண்டும் என்று எல்லோருக்கும் வேண்டுகோள் விட்டதை ஒட்டி, அவையில் அமைதி ஏற்பட்டது. பின்னர் பிற அலுவல்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன."

இந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

6 அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

[பிற்பகல் 12.50]

(2). குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 67/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற 1981 ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டங்கள் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சட்டம் 1971 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட சட்டம் ஆகும். அந்தச் சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வந்து இன்றைய தினம் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்திலே வைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் 1971-ல் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்டது. ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில், தமிழகத்திலே வறுமையால் வாடிக்கொண்டிருக்கின்ற அனைவருக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும் இருக்க இடமும் வேண்டுமென்று சொன்னாரே அந்தக் கருத்தின் அடிப்படையில் வறுமையால் வாடிக்கொண்டிருக்கின்ற குடியிருப்

---

*1981 ஆகஸ்டு 24 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.